நமது தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 160 | 4 Pages | 7.1.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 160 | 4 பக்கங்கள் | 7.1.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்**
**காக்கினென் காவாக்கா லென்**

**விளக்கம்:** பலிக்கும்இடத்தில்சினம்வராமல் காப்பவனே சினம் காப்பவன், பலிக்காத இடத்தில் காத்தால் என்ன, காக்கா விட்டால் என்ன?

## சிங்கங்கள் நிறைந்த ஆபத்தான காட்டில் தொலைந்த 8 வயது சிறுவன்.. 5 நாளாக உயிர்பிழைத்தது இப்படித்தான்



ஆப்பிரிக்கா, ஜன.7

ஜிம்பாப்வே நாட்டின் வடக்குப் பகுதியை சேர்ந்த எட்டு வயது சிறுவன், சிங்கங்கள், யானைகள் மற்றும் பிற ஆபத்தான வனவிலங்குகளின் இருப்பிடமான மட்டுசடோனா தேசிய பூங்காவின் ஆபத்தான வனப்பகுதியில் ஐந்து நாட்கள் உயிர் பிழைத்துள்ள சம்பவம் ஆச்சர்யத்தை ஏற்படுத்தி உள்ளது.

டினோடெண்டா பூண்டு [Tinotenda Pundu] என்று அந்த சிறுவன் டிசம்பர் 27 அன்று வடக்கு ஜிம்பாப்வேயில் உள்ள தனது கிராமத்திற்கு அருகே சுற்றித் திரிந்துகொண்டிருந்தபோது சிறுவன் தொலைந்து போனான்

5 நாட்களுக்கு பிறகு சுமார் 30 மைல்கள் (50 கிமீ) தொலைவில் உள்ள வனப்பகுதியில் சிறுவன் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டான். நீரிழப்பினால் பலவீனமான நிலையில் சிறுவன் மீட்கப்பட்டான். வறட்சியின்போது தனது கிராமத்தில் கற்றுக்கொடுத்த யுக்திகளை பயன்படுத்தி சிறுவன் உயிர்பிழைத்துள்ளான்.

சிறுவன் ஒரு ஆற்றங்கரையில் குச்சிகளைப் பயன்படுத்தி தண்ணீரைத் தோண்டி, ட்ஸ்வான்ஸ்வா என்ற காட்டுப் பழத்தை உண்டு வாழ்ந்துள்ளான்.


சிறுவனின் கதையை விவரித்த உள்ளூர் எம்.பி. முட்சா முரோம்பெட்ஸி, சிறுவன் அலைந்து திரிந்து , திசை தவறி, ஆபத்தான மட்டுசடோன்ஹா பூங்காவிற்குத் தெரியாமல் சென்றுள்ளான்.

ஹாக்வேக்கு அருகிலுள்ள காட்டில் 5 நீண்ட, கொடூரமான நாட்களுக்குப் பிறகு. உமே நதியின் துணை நதி அருகே சிறுவனை ரேஞ்சர்கள் உயிருடன் கண்டுபிடித்தனர்.

வீட்டிலிருந்து 23 கிமீ தூரம் அலைந்து திரிந்து, கர்ஜனை செய்யும் சிங்கங்கள், யானைகளைக் கடந்து செல்வது, காட்டுப் பழங்களை உண்பது மற்றும் ஆபத்தான காட்டுப் பகுதிகளுக்கு மத்தியில் உறங்குவது, 8 வயது சிறுவனுக்கு மிகவும் கடினமாக இருந்திருக்கும் என்று விவரித்தார். மட்டுசடோனா பூங்காவில் சுமார் 40 சிங்கங்கள் உள்ளன.

துணிச்சலான பூங்கா ரேஞ்சர்களுக்கும், நியாமினியாமி சமூகத்தை சேர்ந்தவர்களும், ஒவ்வொரு நாளும் சிறுவன் கேட்கும்படி டிரம்ஸ் அடித்து தேடி கடைசியில் கண்டுபிடிக்க உதவியுள்ளார்கள் என்று நன்றி தெரிவித்த எம்.பி., டினோடெண்டாவைக் கவனித்து, அவரைப் பத்திரமாக வீட்டிற்கு அழைத்துச் சென்றதற்கு ரேஞ்சர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்தார்.

## ஹிலாரி கிளிண்டன்மெஸ்சி உள்பட பிரபல தொழில் அதிபர் ஜார்ஜ் சொரோசுக்கு அமெரிக்காவின் உயரிய விருது



வாஷிங்டன், ஜன.7

அமெரிக்க அதிபர் ஜோபைடனின் பதவிகாலம் வருகிற 20ந்தேதி முடிகிறது. அன்று தேர்தலில் வெற்றி பெற்ற டிரம்ப் புதிய அதிபராக பதவியேற்கிறார்.

இந்த நிலையில் அமெரிக்காவின் உயரிய குடிமகன் விருதான அதிபர் சுதந்திரப் பதக்க விருதுக்கு 19 பேரை அதிபர் ஜோபைடன் அறிவித்தார்.

அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், முதலீட்டாளர் ஜார்ஜ் சொரோஸ், முன்னணி கால்பந்து வீரரான அர்ஜென்டினாவை சேர்ந்த லியோனல் மெஸ்சி, ஆடை வடிவமைப்பாளர் ரால்ப் லாரன், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் மறைந்த ஆஷ்டன்கார்ட்டர் உள்பட 19 பேர்விருதுக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

அமெரிக்க வெள்ளை மாளிகையில் நடந்த விழாவில் விருதுகளை ஜோபைடன் வழங்கினார். விருது பெற்ற ஹிலாரி கிளிண்டன் அமெரிக்க செனட் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி ஆவார்.

மேலும் அமெரிக்க அரசியல் கட்சியால் அதிபர் வேட்பாளருக்கு பரிந்துரைக்கப்பட்ட முதல் பெண்மணி ஆவார். அவரது பொது சேவைக்காக இவ்விருது வழங்கப்பட்டது. பிரபல முதலீட்டாளரான 94 வயது ஜார்ஜ் சொரோஸ் விழாவில் பங்கேற்கவில்லை. விருதை அவரது மகன் அலெக்ஸ் சொரோஸ் தனது தந்தையின் சார்பாக ஏற்றுக் கொண்டார்.

இதுதொடர்பாக ஜார்ஜ் சொரோஸ் கூறும்போது, `அமெரிக்காவில் சுதந்திரத்தையும் செழிப்பையும் கண்ட ஒரு புலம்பெயர்ந்தவர் என்ற முறையில், இந்த மரியாதையால் நான் மிகவும் ஈர்க்கப்பட்டேன் என்றார்.

ஜார்ஜ் சொரோஸ், இந்திய பிரதமர் மோடியை கடுமையாக விமர்சித்து வந்தவர். அவர் இந்தியாவுக்கு எதிராக அவதூறு பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாக பா.ஜ.க. தெரிவித்தது.

சமீபத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா, இணைத் தலைவராக உள்ள தொண்டு நிறுவனத்திற்கு, ஜார்ஜ் சொரோசின் தொண்டு நிறுவனம் நிதி உதவி செய்வதாக பா.ஜ.க. குற்றம் சாட்டியது.

இவ்விவகாரத்தில் பாராளுமன்றத்திலும் பா.ஜ.க. குரல் எழுப்பியது என்பது குறிப்பிடத்தக்கது. ஜார்ஜ் சொரோசுக்கு விருது வழங்கப்பட்டதற்கு உலக பணக்காரரான எலான் மஸ்க் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

அவர் கூறும்போது, சொரோசுக்கு விருது வழங்கப்பட்டது கேலிக்குரியது. அவர் அடிப்படையில் மனிதகுலத்தை வெறுக்கிறார் என்று நான் நம்புகிறேன் என்றார்.

கால்பந்து வீரர் மெஸ்சி, போட்டிகள் மற்றும் வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றதால் இந்த விருது விழாவில் கலந்து கொள்ள முடிய வில்லை.

# சிந்துவெளி எழுத்து முறையை புரிந்துகொள்ள வழிவகை செய்தால் ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் பரிசு: முதல்வர்



சென்னை, ஜன.8

சென்னை எழும்பூரில் சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டுக் கருத்தரங்கை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார். இதன்பின் சிந்துவெளி பண்பாட்டை கண்டுபிடித்து உலகிற்கு அறிவித்த இந்திய தொல்லியல் கழகத்தின் மேனாள் இயக்குநர் சர் ஜான் மார்ஷல் சிலைக்கு அடிக்கல் நாட்டினார். இதை தொடர்ந்து நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

★ தமிழகத்தில் அமைந்துள்ள ஒரு கட்சியின் அரசு அல்ல, இனத்தின் அரசு.

★ சிந்துவெளி பண்பாடு தொடர்பான கருத்தரங்கு இந்தியாவில் வேறு எங்கும் நடைபெறவில்லை.

★ சிந்துவெளி நாகரீகத்தில்திராவிடமொழிபேசப்பட்டிருக்காலம் என கூறப்பட்டது.

★ சிந்துவெளி நாகரீகம் முதன் முதலில் 1924ம் ஆண்டு உலகுக்கு அறிவிக்கப்பட்டது.

★ சிந்துசமவெளி நாகரீகத்தை உலகிற்கு எடுத்துக் காட்டியவர் சர் ஜான் மார்ஷல்.

★ 1948ம் ஆண்டு காலத்தில் சிந்துவெளி அடையாளங்களை வெளிகொண்டு வந்தவர் அண்ணா.

★ செம்மொழி மாநாட்டில் சிந்துவெளி நாகரீகத்தை அடையாளப்படுத்தியவர் கலைஞர் கருணாநிதி.

★ சிவகங்கை மாவட்டம் கீழடி அகழாய்வு உலகை ஈர்த்துள்ளது.

★ கீழடியைப் போலவே பொருணையிலும் அருங்காட்சியக பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ சிந்துவெளி அகழ்வாராய்ச்சி பணிகள் உலக அளவில் கவனம் பெற்றுள்ளது.

★ சிந்துவெளி குறியீடுகளும், கீழடி குறியீடுகளும் 60 சதவீதம் ஒத்துப்போகின்றன.

★ சிந்துவெளி பண்பாட்டின் எழுத்து முறையை தெளிவாக புரிந்துகொள்ள உதவும் வழிவகையை கண்டறியும் அமைப்பு அல்லது நபருக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் வழங்கப்படும்.

★ கல்வெட்டு ஆய்வாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் 2 அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கப்படும்.

★ தொல்லியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் பெயரில் ஆய்வு இருக்கைஅமைக்க ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்றார்.

# அண்ணா பல்கலைக்கழக விவகாரத்தில் குற்றவாளிக்கு தூக்கு தண்டனை வழங்க வேண்டும்: ஜி.கே.வாசன் தாக்கு



ஈரோடு, ஜன.6

ஈரோடு வில்லரசம்பட்டியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் இன்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் கொங்கு மண்டல நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், புதிய கட்சி உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அதில் ஜி.கே.வாசன் எம்.பி. நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழகத்தின் முக்கிய பிரச்சனையாக அண்ணா பல்கலைக் கழக மாணவிக்கு நிகழ்ந்த பிரச்சனை உள்ளது. இதன் காரணமாக லட்சக்கணக்கான பெற்றோர்கள், மாணவிகள் அச்சத்தில் இருப்பது தான் உண்மை நிலை.

குற்றவாளிக்கு யார் பின்பலமாக உள்ளார்கள். அரசியல் பின்புலம் இருப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது. அதனால் யார் அந்த சார் என்பதை தெளிவுப்படுத்தினால் தான் மக்கள் அரசை நம்புவார்கள். குற்றவாளியை விரைவில் விசாரித்து தண்டனையை விரைந்து வழங்க வேண்டும்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு குற்றவாளிக்கு தூக்கு தண்டனை வழங்க வேண்டும் என்பது தான். தமிழகத்தில் சட்ட ஒழுங்கு சீர்குலைந்து இருக்க காரணம் ஒருபுறம் டாஸ்மாக், மறுபுறம் போதை பொருட்கள் நடமாட்டம். இதனை கட்டுப்படுத்த,நிறுத்தமுடியமால், முற்றுப்புள்ளி வைக்க முடியாமல்தமிழகஅரசுசெயல்படுவதுதமிழகமக்களுக்கு தலைக்குனிவு.

பாலியல் வழக்குகளில் உண்மையான குற்றவாளி என கண்டறியப்பட்டால் தூக்கு தண்டனை வழங்குவதில் தவறில்லை. விசாரணை நம்பிக்கைக்குரிய விசாரணையாக நடைபெற வேண்டும் என்றால் கடந்த மாதம் 23ம் தேதி நிகழ்ந்த சம்பவத்தில் தொடர்ந்து கடந்த 15 நாட்களாக திகில் சினிமா போல ஊடகங்களில் செய்தி வருவது பொதுமக்கள் மத்தியில் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்துகிறது.

இதுகுறித்து முதலமைச்சர் நேரடியாக பதில் கூறாதது உண்மையில் மகளிருக்கு போதுமான மரியாதை கொடுக்கவில்லை என்பது தான் அர்த்தம். தி.மு.க .கூட்டணியில் உள்ள தோழமை கட்சி கூட நேரடியாக சம்பவத்தை விமர்சனம் செய்து போராட்டம் நடத்துபவர்கள் கைது செய்து எமர்ஜென்சி போல நிலை ஏற்படுகிறது என்று தோழமை கட்சி கூறுவது அரசு நிர்வாக சீர்கேடுக்கு எடுத்துக்காட்டு.

அண்ணா பல்கலைக்கழகம் மாணவி விவகாரத்தில் அரசியல் செய்யவில்லை. பெற்றோர், மாணவிக்கு எதிர்கட்சிகள் துணை நிற்க வேண்டும் என்ற அடிப்படையில் செயல்பாடுகள் உள்ளது. அதே நேரத்தில்நீதிமன்றம் ஆணையை ஏற்கிறோம். அமைச்சர் துரைமுருகன் மகன் வீட்டில்அமலாக்கத்துறைசோதனை சட்டத்தின் படி தான் நடக்கின்றது.

சட்டம் ஆளும் கட்சிக்கும், எதிர்கட்சிக்கும் ஒன்று தான். அமலாக்கத்துறை சோதனை குறித்து தி.மு.க செய்தி தொடர்பாளர்கள் விளக்கம் கொடுக்க வேண்டும். மாணவி விவகாரத்தில் நாள்தோறும் திடுக்கிடும் தகவல்கள் வருகிறது. அதனால் பெற்றோர், மாணவிகளுக்கு நம்பிக்கை கொடுக்க வேண்டும் என்றால் சி.பி.ஐ விசாரணைக்கு போக வேண்டும்.

இந்த விவாகரத்தில் தமிழக அரசு எதையோ மறைக்க நினைப்பதாக மக்கள் நினைக்கின்றனர். ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் குறித்து தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வமான அறிவிப்பு வந்தவுடன் கூட்டணி சார்பில் அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியிடப்படும். தேர்தலுக்கு 6 மாதம் முன்பு தான் அனைத்து கட்சிகளும் தங்களை பலப்படுத்தி கொள்ள நினைக்கும்.

அதன் அடிப்படையில் தமிழகம் முழுவதும் கட்சி பணிகளை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி, உறுப்பினர்கள் அதிகரிப்பு பணிகளை செய்து வருகிறது. தமிழகத்தில் மாநகராட்சி, நகராட்சி ஆகியவற்றுடன் ஊராட்சி பகுதிகளை இணைக்கும் சட்ட ஆணையை ரத்து செய்ய வேண்டும். ஈரோடு மாவட்டத்தில் கேன்சர் நோயாளிகள் அதிகமாக இருப்பதால் மத்திய, மாநில அரசுகள் இணைந்து பொது சுத்தகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும்.

கோவை இருகூர் முதல் முத்தூர் வரை கேஸ் பைப்லைன் விவசாயிகளின் விளைநிலங்கள் வழியாக அமைக்கப்படும் குழாய்களை சாலையோரமாக கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் தொடர்ந்து பட்டாசு ஆலைகள் வெடி விபத்து நிகழ்ந்து வருகிறது. இதற்கு அரசு சரியான நடவடிக்கை எடுத்து முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

இடைத்தேர்தலில் ஆளும் கட்சி ரூ.2 ஆயிரம், 3 ஆயிரம் கொடுக்க நினைக்கும் நிலையில் பேரிடர் மற்றும் பொங்கல் தொகுப்பு என்றால் நிவாரண தொகை வழங்குவதில்லை. அதனால் பொங்கல் சிறப்பு தொகுப்பில் பணம் வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தென்காசி மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப்பாளராக S. அரவிந்த் பொறுப்பேற்பு




தென்காசி, ஜன.7

திருநெல்வேலி மாவட்டத்தின் பகுதியாக இருந்து வந்த தென்காசி 2019 நவம்பர் 22ஆம் தேதி புதிய மாவட்டமாக உருவாக்கப்பட்டது.

தென்காசி மாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்டு இதுவரை 5 மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் பதவி வகித்துள்ளனர். ஐந்தாவது காவல் கண்காணிப்பாளராக கடந்த ஆகஸ்ட் மாதம் பொறுப்பேற்றுக் கொண்ட சீனிவாசன், சென்னைக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டார். இதை தொடர்ந்து, தென்காசி மாவட்ட புதிய காவல் கண்காணிப்பாளராக S. அரவிந்த் நியமிக்கப்பட்ட நிலையில் இன்று அவர் பொறுப்பேற்றுக் கொண்டார்.




தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறிய கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ. கே.கமல் கிஷோர் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் வாக்காளர் பட்டியலை வெளியிட்டார்கள்

# தேர்வுக்கு தயாராக பிரதமர் எழுதிய புத்தகத்தை மாணவர்கள் படிக்கவேண்டும்: ஆர்.என்.ரவி அறிவுரை

சென்னை, ஜன.7

தனியார் தொண்டு நிறுவனம் ஒன்று, விளிம்பு நிலையில் உள்ள சுமார் 5,000 மாணவர்களை தனியார் கேளிக்கை பூங்காவிற்கு இன்பச் சுற்றுலா அழைத்து செல்ல ஏற்பாடு செய்தது.

இந்நிலையில், மாணவர்களின் இன்பச்சுற்றுலாவை கவர்னர் மாளிகையில் இருந்து தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி கொடியசைத்து தொடங்கி




வைத்தார்.

அப்போது மாணவர்களிடம் பேசிய கவர்னர் ஆர்.என்.ரவி, கல்வி மட்டுமே பிறருக்கு நன்மை செய்யும் பலம், வலிமை மற்றும் தலைமை பண்பை கொடுக்கும். மாணவர்கள் கடுமையாக முயன்று கல்வி பயில வேண்டும். மாணவர்கள் வாழ்வில் நேர மேலாண்மையை நெறிப்படுத்த வேண்டும்.

மாணவர்கள் தேர்வுக்கு தயாராக பிரதமர் மோடி எழுதிய எக்ஸாம் வாரியர்ஸ் (Exam Warriors) புத்தகத்தை படிக்க வேண்டும் என தெரிவித்தார்.

# 10 மாதங்களுக்கு பிறகு சோழவரம் ஏரி 50% நிரம்பியது

திருவள்ளூர், ஜன.7

சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிகளாக பூண்டி, புழல், செம்பரம்பாக்கம், சோழவரம், கண்ணன்கோட்டை தேர்வாய் கண்டிகை ஏரிகள் உள்ளன.

வடகிழக்கு பருவமழையால் குடிநீர் வழங்கும் ஏரிகளில் சோழவரம் ஏரியை தவிர மற்ற ஏரிகள் அனைத்தும் நிரம்பின. முழு கொள்ளளவை எட்டியதால் புழல், செம்பரம்பாக்கம், பூண்டி ஏரிகளில் இருந்து ஏற்கனவே உபரி நீர் திறந்துவிடப்பட்டது.

தற்போது பூண்டி ஏரியில் இருந்து மட்டும் 1000



கனஅடி உபரி நீர் கொசஸ்தலை ஆற்றில் வெளியேற்றப்பட்டு வருகிறது.

ஆனால் சோழவரம் ஏரிக்கு மட்டும் எதிர்பார்த்த அளவு தண்ணீர் வரத்து இல்லாமல் இருந்தது. இதனால் சோழவரம் ஏரியில் நீர்மட்டம் மெதுவாக உயர்ந்தது.

இந்த நிலையில் தற்போது சோழவரம் ஏரி 10 மாதங்களுக்கு பிறகு 50 சதவீதம் நிறைந்து உள்ளது. மொத்த கொள்ளளவான 1080 மில்லியன் கனஅடியில் 503 மில்லியன் கன அடி தண்ணீர் நிரம்பி உள்ளது. ஏரிக்கு 450 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது.

கடந்த ஆண்டு இதே நாளில் சோழவரம் ஏரியில் 770 மி.கனஅடி தண்ணீர் இருந்தது குறிப்பிடத்தக்கது.

பூண்டி ஏரியில் மொத்த உயரமான 35 அடியில் 34.93 அடியும், புழல் ஏரியில் 21 அடியில் 19.99 அடியும், செம்பரம்பாக்கம் ஏரியில் 24 அடியில் 23.15 அடிக்கும் தண்ணீர் உள்ளது. ஏரிகளில் தண்ணீர் இருப்பை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள்.

# கூட்டணியில் உள்ள கட்சிகள் மக்களின் எதிர்ப்பு அலைகளை சந்திக்க வேண்டும் செல்லூர் ராஜூ

மதுரை, ஜன.7

மதுரையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் அரசு அலுவலர்கள், அதிகாரிகள் நேர்மையாக பணியாற்ற வேண்டும். சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான ஞானசேகர் மட்டும்தான் சம்பந்தப்பட்டு இருக்கிறார் என போலீஸ் கமிஷனர் பேட்டி கொடுக்கிறார். இதற்கு தி.மு.க. அரசின் அழுத்தம் தான் காரணம்.

இந்த சம்பவம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்த அனுமதி மறுக்கப்படுகிறது, வழக்கு போடுகிறார்கள். இதற்காக தி.மு.க. கூட்டணியில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைவர் பாலகிருஷ்ணன் தி.மு.க. அரசை கண்டித்து இருக்கிறார். போராட்டம் நடத்தவில்லை என்றால் மக்களின் பிரச்சனையை எப்படி கொண்டு செல்ல முடியும் என பாலகிருஷ்ணன் கேள்வி கேட்டு உள்ளார்.

இதற்காக இது தோழமைக்கு அழகா? என்று முரசொலி பத்திரிகையில் பாலகிருஷ்ணனுக்கு பல கேள்விகளை கேட்டு கட்டுரைவந்துள்ளது.தி.மு.க. அரசு மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டது. எங்கள் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அண்ணா பல்கலைக்கழக பாலியல் வன்கொடுமை வழக்கை சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்று சொன்னார். அதன் தொடர்ச்சியாக கம்யூனிஸ்ட் கட்சியும் அதையே சொல்கிறார்கள்.

ஆளுங்கட்சியின் அத்துமீறல் அதிகரித்து வருகிறது. தி.மு.க.வினரின் குணத்தை மாற்ற முடியாது. சர்வாதிகாரியாக மாறி சவுக்கால் அடிப்



பேன் என மு.க.ஸ்டாலின் சொன்னார், ஆனால் அன்பு சகோதரர் அண்ணாமலை தான் தன்னைத் தானே சவுக்கால் அடித்துக்கொண்டார்.

மாணவி பாலியல் வழக்கில் கைதாகி சிறையில் உள்ள ஞானசேகரன் தி.மு.க. அமைச்சர்களோடு அரசுநிகழ்ச்சிகளில் பங்கேற்று இருக்கிறார். மாலை நேரத்தில் பிரியாணி கடை வைத்து நடத்துகிறார். இரவு நேரத்தில் பாலியல் வன்கொடுமை, வீடு புகுந்து திருடுவது உள்ளிட்ட சமூக விரோத செயல்களில் ஈடுபட்டுள்ளார்.

தி.மு.க. கூட்டணியில் பயணம் செய்யும் கட்சிகள் மக்களின் எதிர்ப்பலைகளை சந்திக்க வேண்டி இருக்கும். தி.மு.க. என்ற கப்பல் ஓட்டை கப்பல் ஆகிவிட்டது. எனவே அந்த கப்பலை மாலுமி எவ்வளவுதான் திறமையாக இருந்தாலும் கரை சேர்க்க முடியாது. தற்போது தி.மு.க.வின் தோழமைக் கட்சிகள் ஜனநாயக பூர்வமாக குரல் எழுப்புகிறார்கள்.

தமிழ்நாட்டின் நம்பிக்கை நட்சத்திரமாக எடப்பாடி பழனிசாமி இருக்கிறார். மக்களுக்கு எந்த பிரச்சனை வந்தாலும் தட்டிக் கேட்கும் வல்லமையாக எடப்பாடி பழனிசாமி இருக்கிறார்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னையில் பிரபல உணவகத்தில் வாங்கிய சிக்கனில் நெளிந்த புழு

போரூர், ஜன.7

போரூர், அடுத்த காரம்பாக்கம் பகுதியை சேர்ந்தவர் கார்த்திகேயன். தனியார் நிறுவன ஊழியர். இவர் நேற்று இரவு ஆன்லைன் மூலம் அய்யப்பந்தாங்கல் பகுதியில் செயல்பட்டு வரும் பிரபல உணவகத்தில் சிக்கன் ஆர்டர் செய்தார்.

சிறிது நேரத்தில் அங்கு வந்த டெலிவரி ஊழியர் கார்த்திகேயனிடம் உணவு பார்சலை கொடுத்து விட்டு சென்றார். பார்சலை பிரித்த போது அதில் உள்ள சிக்கனில் இருந்து புழுக்கள் ஒவ்வொன்றாக நெளிந்து வெளியே வந்தது. இதனை கண்டு கார்த்திகேயன் அதிர்ச்சி அடைந்தார்.

இதனை உடனடியாக வீடியோவாக பதிவு செய்த அவர் உணவகத்திற்கு நேரில் சென்று அங்கிருந்த ஊழியர்களிடம் கூறினார்.

ஆனால் ஊழியர்கள் சரிவர பதில் கூறவில்லை என்று தெரிகிறது. இதனால் கார்த்திகேயனுக்



கும், உணவக ஊழியர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. உணவத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

இது தொடர்பாக கார்த்திகேயன் தேசிய உணவு பாதுகாப்புத் துறைக்கு ஆன்லைன்மூலம்வீடியோ ஆதாரத்துடன் புகார் அளித்துள்ளார். இதுகுறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# குற்றாலம் மெயின் அருவியில் அலைமோதிய கூட்டம்

தென்காசி, ஜன.7

தென்காசி மாவட்டம் குற்றால அருவி களில் இன்று விடுமுறை தினம் என்பதால் பொதுமக்கள் கூட்டம் மற்றும் ஐயப்ப பக்தர்களின் கூட்டம் அலைமோதியது.

சபரிமலைக்கு செல்லும் ஐயப்ப பக்தர்கள் இன்று அதிகாலை முதலே குற்றாலம் மெயின் அருவியில் புனித நீராடி குற்றால நாதர் கோவிலில் வழி



பட்டனர்.

மேலும் ஐந்தருவி, பழைய குற்றால அருவியிலும் தண்ணீர் மிதமாக விழுவதால் உள்ளூர் மட்டுமின்றி வெளியூர்களில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் அருவிகளில் குளித்து மகிழ்ந்தனர்.

குற்றாலம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் காலை முதலே வெயிலின் தாக்கம் குறைந்து குளிர்ந்த காற்றுடன் இதமான சூழ்நிலை நிலவியது.

# அரசு மருத்துவமனை இல்லாததால் முதலுதவி தாமதம் விபத்தில் சிகிச்சை பெற்று வந்த சுரண்டை பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் பலி

தென்காசி, ஜன.7

தென்காசி சுரண்டை சிவகுருநாதபுரத்தை சேர்ந்தவர் டி.கே.எம். மாதாள பாண்டியன் (70) இவர் சுரண்டை பேரூராட்சியாக இருந்தபோது 10 ஆண்டுகள் பேரூராட்சி மன்ற தலைவராக பணியாற்றினார்

இவர் கடந்த 30ம் தேதி மாலை 6 மணி அளவில் கடையம் அருகே உள்ள மாதாபுரத்தில் அவருக்கு சொந்தமான செங்கல் சூளையில் பணி முடிந்து சுரண்டை நோக்கி பைக்கில் வந்து கொண்டிருந்தார். அப்போது சுரண்டை நகராட்சி பகுதிக்குட்பட்ட பாவூர்சத்திரம் செல்லும் ரோட்டில் தனி



யார் மதுபான கடை அருகே போது வந்த போது எதிர்பாராத விதமாக மதுபான கடையில் இருந்து வெளியே வந்த நபர் ஒருவர் ரோட்டை கடந்துள்ளார். அப்போது நிலைதடுமாறி பைக்கிலிருந்து கீழே விழுந்த மாதாள பாண்டியனுக்குதலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த சுரண்டை போலீசார் மற்றும் விவசாயப்பணியில் ஈடு பட்டிருந்த பொது மக்கள் அவரை மீட்டனர் சுரண்டையில் அரசு மருத்துவமனை இல்லாத காரணத்தால் அவருக்கு முதலுதவி சிகிச்சை கூட அளிக்க முடியவில்லை ஆம்புலன்ஸ் வரவும் தாமதமாகியுள்ளது

தொடர்ந்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு கடந்த ஒரு வாரமாக சிகிச்சைபெற்று வந்த நிலையில் நேற்று மாலை சிகிச்சை பலனின்றி மாதாளபாண்டியன் பரிதாபமாக உயிரிழந்தார். விபத்து குறித்து சுரண்டை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இச் சம்பவம் இப்பகுதியில் கடும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது

# மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுதி.மு.க. சங்கடங்களை சரி செய்ய காங்கிரஸ் முயற்சிக்கும்: செல்வப்பெருந்தகை உறுதி

சென்னை, ஜன.7

தி.மு.க. மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள பிரச்சனை கூட்டணி கட்சிகளையும் அதிர்ச்சி அடைய வைத்து உள்ளது.

இதுபற்றி தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை கூறியதாவது:

மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு செயலாளர் கே.பாலகிருஷ்ணன் மூத்த அரசியல் தலைவர். மிக நீண்ட அரசியல் அனுபவம் வாய்ந்தவர். தனது



வருத்தத்தை தெரிவித்துள்ளார்.

ஆனால் ஒன்று இந்தியா கூட்டணி எந்த கட்டத்திலும் மாறுபட்டு போக இடம் அளிக்க கூடாது. அதற்கு காங்கிரஸ் முக்கிய பங்காற்றும்.

இந்தியா கூட்டணி சிந்தாமல், சிதறாமல் 2026 சட்டமன்ற தேர்தலையும் எதிர்கொள்ள வேண்டும். இரு கட்சிகளிடையேயும் மனமாச்சரியங்கள், சங்கடங்கள் இருந்தால் அதுகளையப்பட வேண்டும். எல்லோரும் ஒற்றுமையாக அமர்ந்து பேசுவோம். அதற்கான முயற்சிகளை காங்கிரஸ் மேற்கொள்ளும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பழனியில் பாதயாத்திரை பக்தர்கள் வருகை அதிகரிப்பு

பழனி, ஜன.7

தமிழ்கடவுள்முருகனின் 3ம் படை வீடான பழனிக்கு தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் வருகின்றனர். தைப்பூசம், வைகாசி விசாகம், பங்குனி உத்திரம் என வருடம் முழுவதும் திருவிழாக்கோலம் பூண்டிருக்கும். இங்கு குறிப்பாக கேரளாவில் இருந்து அதிக அளவில் பக்தர்கள் வருகின்றனர்.

தற்போது சபரிமலை சீசன் நடைபெற்று வருவதால் பல்வேறு மாநிலங்களில் இருந்தும், தமிழகத்தில் இருந்தும் ஐயப்பன் கோவிலுக்கு மாலை அணிந்து செல்லும் பக்தர்கள் ஆன்மீக பயணமாக பழனி கோவிலுக்கும் வருகின்றனர். இன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை



தினம் என்பதால் சுற்றுவட்டாரபகுதிகளில் இருந்தும் ஏராளமானோர் வந்ததால் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. அடிவாரம், பஸ்நிலையம், கிரிவீதி, மின்இழுவை ரெயில்நிலையம், ரோப்கார் நிலையம், படிப்பாதை, யானைப்பாதை உள்ளிட்ட இடங்களில் அதிக அளவு பக்தர்கள் கூடினர்.

மேலும் மலைக்கோவிலில் நீண்டநேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். ஐயப்ப பக்தர்கள் வருகையால் அடிவார பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து காணப்பட்டது. இதனை போலீசார் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

மேலும் பக்தர்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கோவில் நிர்வாகம் சார்பில் செய்யப்பட்டிருந்தது.

தைப்பூசத்தையொட்டி திண்டுக்கல், தேனி, மதுரை, காரைக்குடி, திருப்பூர், கோவை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து தற்போது பாதயாத்திரையாக பக்தர்கள் வரத்தொடங்கியுள்ளனர். அவர்கள் கிரிவீதியில் உற்சாகமாக ஆடிப்பாடி காவடி எடுத்து மலைக்கோவிலுக்கு சென்று தண்டாயுதபாணி சுவாமியை தரிசனம் செய்து வருகின்றனர்.

இனி வரும் காலங்களில் பக்தர்கள் வருகை மேலும் அதிகரிக்கும் என்பதால் சாலைகளில் பாதுகாப்பு, குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைத்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# யாரை சரி கட்டுவதற்காக அமைச்சர் டெல்லி போகிறார் என்பது தெரியவில்லை பிரேமலதா

திருவண்ணாமலை, ஜன.7

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் இன்று காலை சாமி தரிசனம் செய்தார். இதன்பின் செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது:

திருவண்ணாமலையில் இன்று ஒரு நாள் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் உள்ளது.

நிலச்சரிவு ஏற்பட்ட இடத்தில் பார்வையிட உள்ளோம். மேம்பாலம் கட்டப்பட்ட 3 மாதத்தில் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டது. அந்த இடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்ய உள்ளோம். தமிழகத்தில் நடக்கும் அவலங்கள் மற்றும் அனைத்துபிரச்சனைகளையும் சுட்டிக்காட்டி திருவண்ணாமலையில்இன்று மாலை மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடக்கிறது.

தமிழகத்தில் சட்ட ஒழுங்கு மிக, மிக கேள்விக்குறியாக உள்ளது.



அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரம் முதல்,விக்கிரவாண்டியில் பச்சிளம் குழந்தை கழிவு நீர் தொட்டியில் விழுந்து இறந்ததாக கூறப்படுவது வரை சிறிய குழந்தைகள் முதல் பெரிய பெண்கள் வரை எந்த பாதுகாப்பும் இல்லாத சூழல் உள்ளது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது.

அரசு சட்ட ஒழுங்கை கையில் எடுத்து எல்லோருக்கும் பாதுகாப்பை உருவாக்கி தர வேண்டும். இது அரசின் கடமை. ஏற்கனவே உள்ள கட்சிக் கூட்டணியில் தே.மு.தி.க. தொடர்ந்து உள்ளது. 2026 சட்டமன்ற தேர்தலை ஒட்டிதமிழகம்முழுவதும் சுற்றுப்பயணம் செய்ய உள்ளோம். மிகப்பெரிய அளவில் கூட்டணி அமைந்தால் 234 பகுதிகளிலும் தே.மு.தி.க. கூட்டணி வெற்றி பெறும்.

அமைச்சர்துரைமுருகன் வீட்டில் சோதனை செய்தது மிகவும் காலதாமதம். இந்த சோதனை முன்கூட்டியே நடந்திருக்க வேண்டும். லஞ்சம், ஊழல் தலை விரித்து ஆடுகிறது. நானும் வேலூர் மாவட்டம் தான். அங்கு என்னஎன்னபிரச்சனைகள் நடக்கிறது என்பது தெள்ளத்தெளிவாக தெரியும்.

யாரை சரி கட்டுவதற்காக அமைச்சர் டெல்லி போகிறார் என்பது தெரியவில்லை.

அந்த அளவிற்கு ஆளும் கட்சியில் லஞ்சம், ஊழல் தலை விரித்து ஆடுகிறது.

அமைச்சர் வீட்டில் என்ன ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது என்பது குறித்து மக்களுக்கு "உள்ளங்கையில் நெல்லிக்கனியாய்" தெளிவுபடுத்த வேண்டும்.

சோதனையின் போது என்ன நடக்கிறது என்பது மக்களுக்கு தெரிவதில்லை.

கேப்டன் விஜயகாந்த் கூறுவதைப் போல தவறு செய்தவர் தண்டனை அனுபவித்தாக வேண்டும். உப்பு தின்னவன் தண்ணி குடிக்க வேண்டும்.

லஞ்சம், ஊழல் மட்டுமின்றி கனிம வள கொள்ளை மற்றும் மணல் கொள்ளை தலைவிரித்து ஆடுகிறது. இதை தடுக்கக் கூடிய வகையில் இந்த சோதனை அமைய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சுற்றுலா பயணிகள் குவிந்ததால் களை கட்டிய கன்னியாகுமரி



கன்னியாகுமரி, ஜன.7

இந்தியாவின் தென் கோடி முனையில் அமைந்துள்ளது கன்னியாகுமரி. இது ஒரு உலகப்புகழ் பெற்ற சுற்றுலா தலமாகும். இங்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். இங்கு வருடம் முழுவதும் சுற்றுலா பயணிகள் வந்து சென்றாலும் நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய 3 மாதங்களும் வழக்கத்தை விட அதிகமான சுற்றுலா பயணிகள் வருவார்கள். இந்த 3 மாத காலமும் இங்கு சீசன் காலமாக கருதப்படுகிறது. இதேபோல ஏப்ரல், மே கோடை விடுமுறை சீசன் காலங்களிலும் ஏராளமான சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரிக்கு படையெடுப்பார்கள்.

இந்த ஆண்டு சபரிமலை சீசன் கடந்த நவம்பர் மாதம் 16ந்தேதி தொடங்கியது. இதைத்தொடர்ந்து கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்த நிலையில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை தொடர் விடுமுறையையொட்டி சுற்றுலா தலங்களுக்கு மக்கள் குவிந்த வண்ணமாக உள்ளனர். அந்த அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளான இன்று கன்னியாகுமரியில் ஆயிரக்கணக்கான சுற்றுலாபயணிகளும், ஐயப்ப பக்தர்களும் வந்து குவிந்த வண்ணமாக உள்ளனர்.

கன்னியாகுமரியில் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் சங்கிலித்துறை கடற்கரை பகுதியில் இன்று அதிகாலையில் சூரியன் உதயமாகும் காட்சியை காண ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்து இருந்தனர். கன்னியாகுமரி கடலில் இன்று அதிகாலையில் சூரியன் உதயமான காட்சி தெளிவாக தெரிந்தது. சூரியன் உதயமான இந்த அற்புத காட்சியை சுற்றுலா பயணிகள் பார்த்து ரசித்து கைதட்டி ஆரவாரம் செய்தனர். அதன்பிறகு கன்னியாகுமரி முக்கடல் சங்கமத்தில் காலையில் இருந்தே ஏராளமான சுற்றுலா பயணிகள் ஆனந்த குளியல் போட்டனர். கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் மற்றும் திருப்பதி வெங்கடாஜலபதி கோவிலில் தரிசனத்துக்காக பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.

விவேகானந்தர் நினைவு மண்டபத்தை பார்வையிட இன்று காலை 6 மணியில் இருந்தே சுற்றுலா பயணிகள் படகுத்துறையில் நீண்ட கியூவில் காத்திருந்தனர். காலை 8 மணிக்கு படகு போக்குவரத்து தொடங்கிய பிறகு சுற்றுலா பயணிகள் படகில் ஆர்வமுடன் பயணம் செய்து விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை பார்வையிட்டு திரும்பினர். கண்ணாடி பாலம் வழியாகவும் சுற்றுலா பயணிகள் திருவள்ளுவர் சிலைக்கு நடந்து சென்று பார்வையிட்டு வந்தனர்.

மேலும் கன்னியாகுமரியில் உள்ள சுற்றுலா தலங்களான காந்தி நினைவு மண்டபம், காமராஜர் மணிமண்டபம், சுனாமி நினைவு பூங்கா, கடற்கரை சாலையில் உள்ள பேரூராட்சி பொழுதுபோக்கு பூங்கா, சன்செட் பாயிண்ட் கடற்கரை பகுதி, மியூசியம், அரசு அருங்காட்சியகம், மீன் காட்சி சாலை, சுற்றுச்சூழல் பூங்கா, கலங்கரை விளக்கம் உள்பட அனைத்து சுற்றுலா தலங்களிலும் இன்று காலையில் இருந்தே சுற்றுலா பயணிகள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

கன்னியாகுமரியில் விடுமுறை நாளான இன்று சுற்றுலா பயணிகளின் கூட்டம் நிரம்பி வழிவதால் சுற்றுலா தலங்கள் களை கட்டியது. இந்த சுற்றுலா தலங்களில் பலத்த போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது. கடற்கரை பகுதியில் சுற்றுலா போலீசாரும் கடலோர பாதுகாப்பு குழும போலீசாரும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வந்தனர்.

# மார்கழி மாத பவுர்ணமி: சதுரகிரிக்கு பக்தர்கள் செல்ல 4 நாட்கள் அனுமதி

வத்திராயிருப்பு, ஜன.7

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலுக்கு பிரதோஷம் மற்றும் பவுர்ணமியை முன்னிட்டு வருகிற 11ந் தேதி முதல் 14ந் தேதி வரை பக்தர்கள் மலையேறி சென்று சாமி தரிசனம் செய்ய கோவில் நிர்வாகம் மற்றும் வனத்துறையினர் அனுமதி வழங்கி உள்ளனர்.

பக்தர்கள் காலை 6 மணி முதல் மதியம் 12 மணி வரை மட்டுமே மலையேறி செல்ல அனுமதி உண்டு. இரவு நேரத்தில் பக்தர்கள் கோவில் வளாகப்பகுதியில் தங்குவதற்கு அனுமதி கிடையாது. மலைப்பாதையில் உள்ள நீரோடை பகுதிகளில் பக்தர்கள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிக்கப்பட்ட நாட்களில் எதிர்பாராதவிதமாக மழை பெய்தால் அனுமதி ரத்து செய்யப்படும். பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை கோவில் நிர்வாகத்தினர் செய்து வருகின்றனர்.

# வெம்பக்கோட்டை அகழாய்வில் சங்கு வளையல் கண்டெடுப்பு



விருதுநகர், ஜன.7

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அருகே உள்ள விஜயகரிசல்குளத்தில் 3ம் கட்ட அகழாய்வு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 18 குழிகள் தோண்டப்பட்டுள்ளன. அதில் ஏராளமான சுடு மண் முத்திரைகள், சுடு மண்ணால் செய்யப்பட்ட ஆபரணங்கள், கண்ணாடி மணிகள் உள்பட 2,960 பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

இந்த நிலையில், அகழாய்விபோது கூடுதலாக சங்கு வளையல், சில்லு வட்டு மற்றும் பெண்கள் அலங்காரத்திற்கு பயன்படுத்திய படிகமணி கிடைத்துள்ளன.

இதனை அகழாய்வு இயக்குனர் பொன் பாஸ்கர் தெரிவித்தார்.

# மதுரை: ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கான ஆன்லைன் முன்பதிவு தொடக்கம்



மதுரை, ஜன.7

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மதுரை மாவட்டத்தில் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டு போட்டிகள் அவனியாபுரத்தில் வருகிற 14ந்தேதியும், பாலமேட்டில் 15ந்தேதியும், அலங்காநல்லூரில் 16ந் தேதியும் நடக்கிறது. இந்த நிலையில் ஜல்லிக்கட்டு போட்டிக்கான முகூர்த்தக்கால் நடப்பட்டு முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடைபெறுகின்றன. இந்த போட்டிகளை நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அரசு பிறப்பித்து உள்ளது. அதனை பின்பற்றி போட்டிகள் நடக்கின்றன.

இந்த நிலையில் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஆகிய 3 இடங்களில் நடக்கும் ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்கும் மாடுபிடி வீரர்கள் மற்றும் காளைகளுக்கான ஆன்லைன் முன்பதிவு இன்று (திங்கட்கிழமை) மாலை 5 மணிக்கு தொடங்கவுள்ளது. எனவே காளை உரிமையாளர்கள் மற்றும் மாடுபிடி வீரர்கள் மதுரை மாவட்ட நிர்வாகத்தின் madurai.nic.in என்ற இணையதள முகவரி மூலமாக தங்களது பெயர்களை இன்று மாலை 5 மணி முதல் நாளை (செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணிக்குள் முன்பதிவு செய்திட வேண்டும்.

மதுரை மாவட்டத்தில் நடைபெறும் இந்த 3 ஜல்லிக்கட்டு போட்டிகளில் கலந்துகொள்ளும் காளைகள் அவனியாபுரம், பாலமேடு மற்றும் அலங்காநல்லூர் ஆகிய 3 போட்டிகளில் ஏதாவது ஒரு போட்டியில் மட்டுமே கலந்துகொள்ள அனுமதியளிக்கப்படும்.

மேலும் ஜல்லிக்கட்டு போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள காளையுடன் ஒரு உரிமையாளர் மற்றும் காளையுடன் நன்கு பழக்கமுள்ள ஒரு உதவியாளர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

காளைகள் மற்றும் மாடுபிடி வீரர்களுக்கான ஆன்லைன் முன்பதிவு செய்தவர்களின் சான்றுகள் முழுவதும் சரிபார்க்கப்பட்டபின் தகுதியான நபர்கள் மட்டுமே டோக்கன் பதிவிறக்கம் செய்ய இயலும். அவ்வாறு டோக்கன் பதிவிறக்கம் செய்த நபர்கள் மட்டுமே ஜல்லிக்கட்டு விளையாட்டில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர். இந்த தகவல் மதுரை மாவட்ட கலெக்டர் சங்கீதா வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

# மதுரை எம்.பி. சு.வெங்கடேசன் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதி



சென்னை, ஜன.7

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது மாநில மாநாடு விழுப்புரத்தில் நடைபெற்று வருகிறது. கடந்த 3ந்தேதி தொடங்கிய மாநாடு இன்றுடன் நிறைவுபெறுகிறது. மாநாட்டை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் பிரகாஷ்காரத் தொடங்கி வைத்து பேசினார்.

இந்த மாநாட்டில் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்கள் எம்.ஏ.பேபி, ஜி.ராமகிருஷ்ணன், பிருந்தாகாரத், மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், கட்சியின் மத்தியக்குழு உறுப்பனிர் வாசுகி, டி.கே. ரங்கராஜன், எம்.பி.க்கள் சு.வெங்கடேசன், சச்சிதானந்தம், எம்எல்ஏக்கள் நாகை மாலி சின்னத்துரை உள்ளிட்டோர் பங்கேற்று உள்ளனர்.

இந்தநிலையில், மாநாட்டில் பங்கேற்பதற்காக வந்துள்ள மதுரை எம்.பி. சு.வெங்கடேசன் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சு.வெங்கடேசனை மாவட்ட ஆட்சியர் பழனி, கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் இருவரும் சந்தித்து நலம் விசாரித்தனர்.

# முல்லைப்பெரியாறு அணையில் பராமரிப்புப் பணிகள் தொடக்கம்



கூடலூர், ஜன.7

தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் நீராதாரமாக விளங்கும் முல்லைப்பெரியாறு அணை தமிழக நீர்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதனால் அணை பராமரிப்புப் பணிகள் முழுவதும் தமிழக நீர்வளத்துறை செய்து வருகிறது.

அணையில் வழக்கமாக நடைபெறும் பராமரிப்புப் பணிகளுக்கு தளவாட பொருட்களை கொண்டு செல்ல எவ்வித தடையும் செய்யக்கூடாது என உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்த போதிலும் கேளர அரசின் தடையால் கடந்த 7 மாதங்களாக அணையில் பராமரிப்புப் பணிகள் எதுவும் செய்ய முடியவில்லை. 2024 டிச.4ல் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதற்காக தமிழக நீர்வளத்துறை சார்பில் இரண்டு லாரிகளில் தளவாடப் பொருட்களை கொண்டு சென்றனர்.

வண்டிப்பெரியாறு அருகே வல்லக்கடவு சோதனைச் சாவடியில் கேரள வனத்துறையினர் அனுமதி மறுத்து தடுத்து நிறுத்தினர். இதைக் கண்டித்து தமிழகப் பகுதியில் விவசாயிகள் சார்பில் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடந்தது.

உயர் அதிகாரிகளின் பேச்சுவார்த்தைக்கு பின், 15 நாட்களுக்கு பின் தளவாடப்பொருட்கள் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து தளவாடப் பொருட்கள் அனைத்தும் லாரிகளில் கொண்டு சேர்த்தபின் தற்போது பராமரிப்பு பணிகள் தொடங்கி உள்ளன.

அணையை ஒட்டியுள்ள குடியிருப்பு பகுதிகள், ஆய்வாளர் குடியிருப்புகளில் மட்டும் பராமரிப்புபணிகள்செய்த போதிலும் மெயின் அணை உள்ளிட்ட பகுதிகளில் எவ்வித பணியும் செய்ய அனுமதிக்கவில்லை.

குறிப்பாக பேபி அணையை பலப்படுத்தும் பணிக்கும் இதுவரை அனுமதி இல்லை. இது விவசாயிகளின் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. விவசாயிகள் கூறும்போது:

தற்போது அணையை ஒட்டி அமைந்துள்ள ஆய்வாளர் மாளிகை மற்றும் குடியிருப்புகளில் கழிவு நீர்தொட்டியை பராமரிக்க மட்டுமே அனுமதி வழங்கி பணிகள் நடந்து வருகிறது. ஆனால் பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுள்ள பேபி அணைப்பகுதியில் செய்ய வேண்டிய 14 வேலைக்கான அனுமதியை தருவதில் கேரளா தொடர்ந்து முரண்டு பிடித்து வருகிறது.

பேபி அணையை விரைவில் பலப்படுத்திய பின் அணை நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# கோவிலுக்குள் நடராஜர் சிலையை வைத்து சென்ற மர்ம நபர்கள்



நாகப்பட்டினம், ஜன.7

நாகை மாவட்டம் கீழ்வேளூரில் சுந்தரகுஜாம்பிகை உடனாகிய அட்சயலிங்க சாமி கோவில் உள்ளது.

இங்கு பணிபுரியும் மெய்க்காவலர் சண்முகம் கோவிலுக்குள் உள்ள அனைத்து சன்னதிகளிலும் தினமும் காலை, மாலை நேரத்தில் விளக்கு ஏற்றுவது வழக்கம். நேற்று மாலை கோவில் உள்பிரகாரத்தில் தல விருட்சம் அருகே உள்ள விஸ்வநாதசாமி சன்னதியில் விளக்கேற்றி உள்ளார். அப்போது சாமி அருகே ஒரு நடராஜர் சிலையும், துணிப்பையும் தனித்தனியாக இருந்தன. இதுதொடர்பாக சண்முகம் கோவில் நிர்வாகத்துக்கு தகவல் தெரிவித்தார்.

இதை அறிந்த வருவாய் ஆய்வாளர் (பொறுப்பு) பத்மநாபன், கிராம நிர்வாக அதிகாரி ரவீந்திர பாண்டியன் மற்றும் போலீசார் அங்கு சென்று சிலையை பார்வையிட்டனர். இதையடுத்து சிலை தாசில்தார் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. உலோகத்தால் ஆன அந்த நடராஜர் சிலை மிகவும் பழமையான சிலை போல் உள்ளது. இந்த சிலையை கோவிலுக்குள் வைத்து சென்ற மர்ம நபர்கள் யார்? வேறு கோவிலில் இருந்து கடத்தி வரப்பட்டதா? என்பது தொடர்பாக கீழ்வேளூர் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# ஆற்றில் மீன் பிடித்தபோது மலைத்தேனீக்கள் கொட்டி தொழிலாளி பலி

நாமக்கல், ஜன.7

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு மொளசி பச்சப்பாளி பகுதியை சேர்ந்தவர் தங்கராஜ் (வயது 60). அவருடைய மகன் அருள் (36), மகள் சரண்யா (38). இவர்கள் ஆற்றில் மீன் பிடிக்கும் தொழில் செய்து வருகின்றனர். இந்த நிலையில் இவர்கள் 3 பேரும் மீன்பிடிப்பதற்காக ஈரோடு மாவட்டம் கொடுமுடி அருகே பாசூரில் உள்ள காவிரி ஆற்று பகுதிக்கு வந்திருந்தனர். கரையில் அமைந்துள்ள மின் மயானம் அருகே உள்ள பகுதியில் அமர்ந்து ஆற்றில் மீன்பிடித்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு திடீரென மலைத்தேனீக்கள் பறந்து வந்தன. அவர்களை மலைத்தேனீக்கள் விரட்டி, விரட்டி கொட்டின. இதில் தங்கராஜ், அருள், சரண்யா ஆகிய 3 பேரும் படுகாயம் அடைந்தனர். இதைப்பார்த்த அக்கம்பக்கத்தினர் 3 பேரையும் உடனே மீட்டு சிகிச்சைக்காக அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு டாக்டர்கள் பரிசோதித்துவிட்டு தங்கராஜ் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். அருள், சரண்யா சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# இந்துக்கள் குறைந்தது 3 குழந்தைகள் பெற்றுக்கொள்ள வேண்டும்: கோபால்ஜி பேச்சு




சேலம், ஜன.7

தமிழ்நாடு விசுவ இந்து பரிஷத்தின் சக்தி சேனா மகளிர் அமைப்பின் சேலம் மாவட்ட மாநாடு சேலத்தில் உள்ள ஒரு மண்டபத்தில் நேற்று நடந்தது. சிறப்பு அழைப்பாளராக மாநிலத்தலைவர் ஆர். ஆர்.கோபால்ஜி கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:

தமிழகம் நாயன்மார்கள் வாழ்ந்த பூமி. இங்கு பிறந்ததற்கு புண்ணியம் செய்து இருக்கிறோம். இந்துக்களில் பல்வேறு பிரிவுகள், கடவுள் கும்பிடுவதில் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும், இந்துக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறோம். பெண்களுக்கு மாதம் ரூ.1,000, இலவச பஸ் கொடுத்து விட்டால் போதுமா? ரூ.1,000த்தில் குடும்பம் நடத்த முடியுமா? ஆண்கள் டாஸ்மாக் கடையில் மாதம் ரூ.10 ஆயிரம் செலவு செய்கின்றனர். டாஸ்மாக் கடை இல்லை என்றால் அந்த 10 ஆயிரம் பணம் மூலம் குழந்தைகளை படிக்க வைக்கமுடியும். உரிமை, வாழ்வாதாரங்கள் காக்க டாஸ்மாக் கடையை ஒழிக்க பெண்கள் போராட வேண்டும்.

இந்தியாவை இந்துக்கள் ஆட்சி செய்யவேண்டும் என்றால் இந்துக்கள் அதிகம் இருக்க வேண்டும். எனவே குறைந்தது 3 குழந்தைகள் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்போது தான் இதேமக்கள் தொகை நீடிக்கும். பெண்கள் இந்து தர்மத்தை காக்க இந்து விரோத ஆட்சிகளுக்கு வாக்களிக்கக்கூடாது. இவ்வாறு அவர் பேசினார்.

# கருப்பு நிற துப்பட்டா விவகாரம் காவல்துறை விளக்கம்



சென்னை, ஜன.7

சென்னை எழும்பூரில் சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டுக் கருத்தரங்கை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவிகளின் கருப்பு துப்பட்டாவை போலீசார் அகற்றினர். இதற்கு பாஜக மாநில தலைவர் அண்ணாமலை கண்டனம் தெரிவித்தார்.

இந்நிலையில், முதலமைச்சர் பங்கேற்ற நிகழ்ச்சியில் மாணவிகளின் கருப்பு துப்பட்டா அகற்றப்பட்ட விவகாரத்திற்கு காவல்துறை விளக்கம் அளித்துள்ளது. அதில், " பணியில் இருந்த காவலர்கள் தேவைக்கு அதிகமான எச்சரிக்கையுடன் செயல்பட்டதே காரணம். இனியும் இதுபோன்று நிகழாமல் இருக்க சென்னை காவல் பிரிவிற்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. விழா அரங்கிற்குள்,

அனுமதிக்கப்பட்ட நபர்களை தணிக்கை செய் போலீசார் கருப்பு துப்பட்டா அணிந்து வந்தோரிடம், துப்பட்டாவை வாங்கி வைத்தனர்" என தெரிவித்துள்ளது.

# மாநில அளவில் நடைபெற்ற தடகள போட்டிகளில் வெற்றி பெற்ற பெண் உதவி ஆய்வாளரை நேரில் பாராட்டிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர்

குமரி,ஜன.7

தமிழ்நாடு முதுநிலை தடகள சங்கமும்,மதுரை மாவட்ட முதுநிலை தடகள சங்கமும் இணைந்து நடத்திய 45 வது மாநில அளவிலானதடகளபோட்டியானது கடந்த 03.01.2025ம் தேதி முதல் 05.01.2025 வரை மதுரை மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் வைத்து நடைபெற்றது. இப்போட்டியில் குமரி மாவட்டம் நாகர்கோவில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரியும் பெண் உதவி ஆய்வாளர் கீதா 100மீட்டர், 400 மீட்டர் தடை தாண்டும் போட்டி மற்றும் 800 மீட்டர் ஓட்டப்பந்தயம் ஆகிய போட்டிகளில் கலந்து கொண்டு மூன்று போட்டிகளிலும் முதல் பரிசு பெற்றார். மேலும்இன்று06.01.2025 மாவட்ட காவல் அலுவலகத்தில் வைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர்.இரா.ஸ்டாலின் இ.கா.ப வெற்றி பெற்ற பெண்உதவி ஆய்வாளரை பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.






மதுரை மாநகர புதிய காவல் துணை ஆணையராக (வடக்கு) ஜி.எஸ். அனிதா பொறுப்பேற்றுக்கொண்டார்.

# திருச்செந்தூர் கோவில்: தரிசனம் செய்ய வந்த பக்தர்கள் அவதி: கூடுதல் பஸ்கள் இயக்க பக்தர்கள் கோரிக்கை

திருச்செந்தூர், ஜன.7

அறுபடை வீடுகளில் 2ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் தினமும் ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருகின்றனர். அதேபோல் திருவிழா மற்றும் விடுமுறை நாட்களிலும் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து வழிபடுகிறார்கள்.

இந்த நிலையில் மார்கழி மாதம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டது. 3.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனை, 4 மணிக்கு உதய மார்த்தாண்டஅபிஷேகம், தீபாராதனை நடந்தது. காலை 7.30 மணிக்கு உச்சிகால அபிஷேகமும், தீபாராதனையும், தொடர்ந்து மற்ற கால பூஜைகளும் வழக்கம் போல் நடைபெற்றது.



விடுமுறை தினத்தையொட்டி நேற்று அதிகாலை முதலே பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. அவர்கள் குடும்பத்துடன் கடல் மற்றும் நாழிக்கிணறு தீர்த்தத்தில் புனித நீராடி சுமார் 6 மணி நேரம் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். இதனால் பொதுதரிசன வரிசையிலும், 100 ரூபாய் கட்டண தரிசன வரிசையிலும் பக்தர்களின் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. மேலும் ஏராளமான பாதயாத்திரை பக்தர்கள் வேல் குத்தி, பால்குடம், காவடி எடுத்து வந்து தங்கள் வேண்டுதலை நிறைவேற்றினர்.

இந்தநிலையில், திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய வந்த பக்தர்கள்பஸ் கிடைக்காததால் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. பஸ்கள் பஸ் நிலையத்துக்கு வந்த போது முண்டியடித்து பஸ்களில் ஏறினர். இதனால் பஸ்களில் கூட்டம் காணப்பட்டது. கூட்ட நெரிசலால் பக்தர்கள் கடும் அவதி அடைந்தனர். கூடுதல் பஸ்கள் இயக்க வேண்டும் என பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 'தஞ்சை பெரிய கோவில் உலக அதிசய பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்': அமைச்சர் நாசர்



சென்னை, ஜன.7

சென்னை அரும்பாக்கத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் பொன்விழா மாநாட்டில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் நாசர் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர்கூறியதாவது;

"உலக மாவீரர்கள் என்று எடுத்துக் கொண்டால் நாம் அலெக்சாண்டர், நெப்போலியன் ஆகியோரை சொல்கிறோம். ஆனால் நமக்கு தெரிந்த மாவீரன் ராஜேந்திர சோழன், கிழக்காசிய நாடுகள் முழுவதையும் கைப்பற்றினார். அவரிடம் 5 லட்சம் துருப்புகள் இருந்திருக்கிறார்கள். சுமார் 1 லட்சம் குதிரைகள் கொண்ட குதிரைப்படை இருந்துள்ளது.

அவர் மட்டும் கிழக்காசிய நாடுகளுக்கு பதிலாக மேற்கு நாடுகளை கைப்பற்ற போயிருந்தால், அன்றைய சூழலில் இந்துஸ்தானாக இருந்த நமது இந்தியா, பாகிஸ்தான், கஜகஸ்தான் என அத்தனை தான்களையும் தன்வசம் கொண்டு வந்திருப்பார். ஆனால் அவர் கிழக்கு பக்கம் சென்று கம்போடியா, மலேசியா, சிங்கப்பூர், சீனாவின் சில பகுதிகள் என பல பகுதிகளை கைப்பற்றினார் மாவீரர் ராஜேந்திர சோழன்.

உலக அதிசயம் என்றால் நாம் தாஜ்மகாலை சொல்கிறோம். நமது தஞ்சை பெரிய கோவில் உலக அதிசய பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அது இடம்பெறவில்லை. அதற்கான முயற்சியையும் நாம் எடுக்கவில்லை. அதற்கு காரணம் நமது தாழ்வு மனப்பான்மை."

இவ்வாறு அமைச்சர் நாசர் தெரிவித்தார்.

# புதுச்சத்திரம் அருகே தனியார் பஸ் கவிழ்ந்து விபத்து: 25 பேர் காயம்



ராசிபுரம், ஜன.7

புதுச்சத்திரம் அருகே உள்ள நவனி தோட்டக்கூர் பட்டி ஊராட்சியிலுள்ள பள்ளிப்பட்டி மற்றும் ஓலப்பாளையம் கிராமங்களைசேர்ந்தகுழந்தைகள், பெண்கள் மற்றும் ஆண்கள் என 50க்கும் மேற்பட்ட பக்தர்கள் நேற்று முன்தினம் இரவு மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோவிலுக்கு தனியார் டிராவல்ஸ் பஸ் மூலம் சென்றனர். அவர்களுடன் ராசிபுரத்தை சேர்ந்த 10 பேரும் மேல்மருவத்தூர் சென்றுள்ளனர்.

பின்னர் வழிபாடு செய்துவிட்டு அங்கிருந்து சொந்தஊருக்குபுறப்பட்டு வந்து கொண்டிருந்தனர். ராசிபுரத்தை சேர்ந்தவர்களை இறக்கிவிட்டு விட்டு, அதிகாலை 4 மணியளவில் நவனி தோட்டக்கூர்பட்டி பஸ் நிறுத்தம் அருகே உள்ள லக்கியம்பட்டி பகுதியில் உள்ள வளைவில் சென்றபோது தனியார் பஸ் திடீரென கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் சுமார் 10 அடி பள்ளத்தில் தலைக்குப்புற கவிழ்ந்து விபத்திற்கு உள்ளானது.

இதில் ஓலப்பாளையம் பகுதியை சேர்ந்த மோகனாம்பாள் (37), சுவேதா(15), விசாகா (8), ஜெகதீஸ்வரி (40), பாப்பாத்தி(70),தமிழ்ச்செல்வி (31) ஆகியோர் உட்பட 25 க்கும் மேற்பட்ட பெண்கள் காயமடைந்தனர். பஸ் பள்ளத்தில் கவிழ்ந்த தகவல் அறிந்து அப்பகுதி மக்கள் ஏராளமானோர் சம்பவ இடத்தில் திரண்டனர்.

பின்னர் காயமடைந்தவர்கள் அனைவரும் 108 ஆம்புலன்ஸ் மற்றும் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் ராசிபுரம் மற்றும் நாமக்கல்லில் உள்ள அரசு ஆஸ்பத்திரிகளுக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

மேலும் தீயணைப்பு துறையினர் மீட்பு பணியில் ஈடுபட்டனர். புதுச்சத்திரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் கோமதி தலைமையிலான போலீசார்சம்பவ இடத்தில் விசாரணைநடத்தினர். வளைவு பகுதியில் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் சாலையோர பள்ளத்தில் பஸ் கவிழ்ந்து விபத்திற்கு உள்ளாகி இருக்கலாம் என கூறப்படுகிறது.

இருப்பினும் சம்பவம் தொடர்பாக புதுச்சத்திரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். காயம் அடைந்தவர்களுக்கு ராசிபுரம் மற்றும் நாமக்கல் அரசு ஆஸ்பத்திரிகளில் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# காதலிக்க நேரமில்லை படத்தின் டிரெய்லர் ஜனவரி 7 வெளியாகிறது




ரெட் ஜெயன்ட் மூவிஸ் தயாரிப்பில் இயக்குநர் கிருத்திகா உதயநிதி இயக்கியுள்ள திரைப்படம் காதலிக்க நேரமில்லை. இப்படத்தில் ஜெயம் ரவி, நித்யா மேனன் ஆகியோர் முதன்மை பாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்தப் படத்திற்கு ஏ.ஆர். ரகுமான் இசையமைத்துள்ளார்.

மேலும், இப்படத்தில் யோகி பாபு, லால், வினய், லக்ஷ்மி ராமகிருஷ்ணன், பாடகர் மனோ, TJ பானு, ஜான் கோகேன், வினோதினி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். கேவ்மிக் ஆரி ஒளிப்பதிவில் உருவாகியுள்ள இப்படத்திற்கு லாரன்ஸ் கிஷோர் படத்தொகுப்பை மேற்கொள்கிறார். திரைப்படம் வரும் பொங்கலை முன்னிட்டு வரும் ஜனவரி 14 ஆம் தேதி வெளியாகவுள்ளது.

காதலிக்க நேரமில்லை படத்தின் முதல் பாடலான 'என்னை இழுக்குதடி' & 'லாவண்டர் நேரமே சில வாரங்களுக்கு முன் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில் படத்தின் அடுத்த பாடலான Its Breakup da என்ற பாடல் நேற்று வெளியானது. இந்நிலையில் திரைப்படத்தின் டிரெய்லர் மற்றும் இசை வெளியீட்டு விழா ஜனவரி 7 ஆம் தேதி சென்னையில் நடைப்பெறவுள்ளது.

# காதலியை கரம்பிடித்த மேக்னஸ் கார்ல்சன்.. சிம்பிளாக நடந்த உலகின் நம்பர் 1 செஸ் சாம்பியன் திருமணம்



நார்வே நாட்டை சேர்ந்த உலகின் நம்பர் 1 செஸ் வீரர் மேக்னஸ் கார்ல்சன் [34 வயது] தனது காதலியான எல்லா விக்டோரியா மலோனை திருமணம் செய்து கொண்டார்.

நார்வே தலைநகர் ஒஸ்லோவில் அவர்களின் திருமணம் நடந்து முடிந்துள்ளது. Holmenkollen Chapel தேவாலயத்தில் நடைபெற்ற இந்த திருமணத்தில், குடும்பத்தினர் மற்றும் நெருங்கிய நண்பர்கள் கலந்து கொண்டதாக நார்வே ஊடகமான NRK இன் செய்திகள் தெரிவிக்கின்றன.


chess.com இன் படி, திருமணத்தில் நார்வே நாட்டு செஸ் வீரர்கள் ஜோஹன்னஸ் க்விஸ்லா மற்றும் அஸ்கில்ட் பிரைன், ஜிஎம் பீட்டர் ஹெய்ன் நீல்சன் மற்றும் ஜிஎம் ஜான் லுட்விக் ஹேமர் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் திருமணத்தின் போது நெட்பிளிக்ஸ் படக்குழுவினரும் உடன் இருந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

பின்னர் 5 நட்சத்திர கிராண்ட் ஹோட்டலில் கார்ல்சன் மலோன் திருமண வரவேற்பு நடந்தது. கடந்த ஆண்டு ஜெர்மனியில் நடந்த ஃப்ரீஸ்டைல் செஸ் சேலஞ்சர் நிகழ்வின் போது இவர்கள் காதலை வெளிப்படுத்தினர். அதன் பின் பல்வேறு நிகழ்வுகளில் இவர்கள் ஜோடியாக காணப்பட்டனர். கார்ல்சனின் செஸ் போட்டிகளின் போது அவருக்கு மலோன் ஆதரவளிப்பதைக் காணலாம்.

26 வயதான எல்லா விக்டோரியா மலோன் நார்வே தாய் மற்றும் அமெரிக்க தந்தைக்கு பிறந்தார். ஊடக அறிக்கைகளின்படி, அவர் ஒஸ்லோவில் வளர்ந்தார், அமெரிக்காவில் படித்தார், மேலும் சிங்கப்பூரில் பல ஆண்டுகள் வாழ்ந்தார், அங்கு அவர் நிரந்தர குடியுரிமை பெற்றுள்ளார்.

மலோனுடனான திருமணம் கார்ல்சனின் வாழ்க்கையில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும். வரலாற்றில் மிகச் சிறந்த செஸ் வீரர்களில் ஒருவராக பரவலாகக் கருதப்படும் கார்ல்சன், ஐந்து உலக செஸ் சாம்பியன்ஷிப் பட்டங்கள் உட்பட ஏராளமான அங்கீகாரங்களைப் பெற்றுள்ளார்.

# சிறுவனை பார்க்க வர வேண்டாம் அல்லு அர்ஜூனுக்கு போலீஸ் நோட்டீஸ்




தெலுங்கானாமாநிலம்,ஐதராபாத்தில்உள்ளசந்தியாதியேட்டரில் கடந்த மாதம் புஷ்பா 2 திரைப்படம் வெளியானது.


அப்போது கூட்ட நெரிசலில் சிக்கி ரேவதி என்ற பெண் பலியானார். அவரது மகன் ஸ்ரீதேஜ் படுகாயம் அடைந்து செகந்திராபாத்தில் உள்ள கிம்ஸ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சிறுவனைப் பார்க்க நடிகர் அல்லு அர்ஜுன் செல்ல உள்ளதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து ராம்கோபால்பேட்டை போலீசார் அல்லு அர்ஜுனுக்கு நோட்டீஸ் அனுப்பினர். அதில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் சிறுவனை சந்திக்க வரக்கூடாது.

அப்படி போலீசாரின் எச்சரிக்கையை மீறி வந்தால் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் அதற்கு நீங்கள் தான் பொறுப்பு என அதில் கூறியுள்ளனர்.

# விளையாட முடியாதது விரக்தியை ஏற்படுத்துகிறது ஜஸ்பிரித் பும்ரா



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான பார்டர் கவாஸ்கர் கோப்பையை இழந்த இந்திய அணி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரில் இருந்தும் வெளியேற்றப்பட்டு இருக்கிறது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 1 3 என்ற கணக்கில் இந்திய அணி இழந்தது. தோல்வி குறித்து பேசிய இந்திய அணி கேப்டன் ஜஸ்பிரித் பும்ரா விரக்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து பேசிய ஜஸ்பிரித் பும்ரா, "காயத்தால் விளையாட முடியாதது விரக்தியை ஏற்படுத்துகிறது. சில நேரங்களில் உடலுடன் மல்லுக்கட்டாமல் அதற்கு மதிப்பு கொடுக்க வேண்டும். இந்த தொடரில் பந்துவீச அதிக சாதகமான பிட்ச்இல் பந்துவீச முடியாமல் போனது ஏமாற்றம். முதல் இன்னிங்ஸில் விளையாடும் போதே, கொஞ்சம் அசவுகரியமாக உணர்ந்தேன். இதனால் தான் அந்த முடிவை எடுத்தேன்.

அப்போது மற்ற பந்துவீச்சாளர்கள் நம்பிக்கையுடன் செயல்பட வேண்டும் என்று பேசிக் கொண்டோம். ஒரு பந்துவீச்சாளர் குறைந்த நிலையில், மற்றவர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டிய சூழல் உருவானது. இன்று காலை வெற்றிக்கு தேவையான போராட்ட குணத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று பேசினோம்.

இந்த தொடர் துவங்கியதில் இருந்தே நாங்கள் கடினமான போட்டியை வெளிப்படுத்தினோம். இதனால் இன்று நாங்கள் ஒருதலைபட்சமாக தோற்றோம் என்று அர்த்தமல்ல. டெஸ்ட் போட்டிகள் அப்படித்தான் செல்லும். நீண்ட நேரம் களத்தில் நின்று சூழ்நிலைக்கு ஏற்றவாரு விளையாடுவது முக்கியம். இதுபோன்ற அனுபவங்கள் எங்களுக்கு வருங்காலத்தில் உதவும்.

தங்கள் பலத்தை அடிப்படையாக வைத்து விளையாடிய இளம் வீரர்கள் நல்ல அனுபவம் பெற்றனர். தொடரை வெல்ல முடியாததால் அவர்கள் ஏமாற்றத்தை சந்தித்திருப்பார்கள். ஆனால் இந்த அனுபவத்தில் இருந்து அவர்கள் நிறைய பாடங்களை கற்றுக் கொள்வார்கள். இது சிறந்த தொடராக அமைந்தது. ஆஸ்திரேலியாவுக்கு வாழ்த்துகள். அவர்கள் கடினமாக போராடினார்கள்," என்று கூறினார்.

# தனக்கு கோவில்கட்டி வழிபட்ட ரசிகர்.. நேரில் அழைத்து சந்தித்த ரஜினிகாந்த் புகைப்படம் வைரல்



சினிமாவின் சூப்பர் ஸ்டார் யார்? என்று கேட்டால் சின்ன குழந்தையும் சொல்லும் என்பார்கள். அந்த அளவுக்கு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தனக்கென ரசிகர்கள் பட்டாளத்தை கொண்டவர் தான் ரஜினிகாந்த்.

1975 ஆம் ஆண்டு கே.பாலச்சந்தர் இயக்கத்தில் வெளியான 'அபூர்வ ராகங்கள்' என்ற படத்தின் மூலம் நடிகராக அறிமுகமானார் ரஜினிகாந்த். அதன்பின் கதாநாயகன், வில்லன் என இதுவரை 170 படங்களில் நடித்துள்ளார். இவரது நடிப்பு, ஸ்டைலுக்கென்று உலகம் முழுவதும் ரசிகர் பட்டாளம் உள்ளது. இவரது படம் வெளியீட்டை ரசிகர்கள் திருவிழா போல் கொண்டாடுவார்கள். ரஜினிகாந்த் சினிமாத்துறையில் அடியெடுத்து வைத்து இந்த ஆண்டுடன் 50ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. தற்போது ரஜினிகாந்த் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் 'கூலி' படத்தில் வருகிறார். இந்த படத்தின் வெளியிட்டுக்காக ரசிகர்கள் ஆவலோடு காத்துள்ளனர். இந்த நிலையில், மதுரையை சேர்ந்த ரசிகர் மற்றும் அவரது குடும்பத்தினரை நேரில் அழைத்து சந்தித்துள்ளார் ரஜினிகாந்த். மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் ரஜினிக்காக கோவில் அமைத்து வழிபாடு செய்யும் முன்னாள் ராணுவ வீரரும், ரஜினியின் தீவிர ரசிகருமான கார்த்திக்மற்றும்அவரின்குடும்பத்தினரைநேரில்வரவழைத்தநடிகர்ரஜினிகாந்த்அவர்களைசந்தித்துபேசியுள்ளார். மேலும் அவர்களுக்கு தனது இல்லத்தையும் சுற்றிக்காட்டிய அவர்களுடன் சேர்ந்து புகைப்படமும் எடுத்துக்கொண்டுள்ளார். இப்புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.